**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**
**கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறி – 2015/2017**
**உள்வாரி இறுதிப் பரீட்சை -2017**
**அழகியற் கல்வி – பொதுப் பாடப்பரப்பு**
**பகுதி - I**

**சுட்டிலக்கம் : …………………………….. நேரம் : 1 மணித்தியாலயம்**

**எல்லா வினாக்களுக்கும் இவ்வினாப்பத்திரத்திலேயே விடையளிக்குக.**

**1-10 வரையுள்ள வினாக்களின் கீறிட்ட இடத்தை நிரப்புக.**

1. தமிழிசையில் 'கோவை' என்று அழைக்கப்படுவது ……………………….. ஆகும்.
2. ஸ்வரஸ்தானங்களின் எண்ணிக்கை ………………….. ஆகும்
3. பரத சாஸ்திரம் என்ற நூலை இயற்றியவர் …………………… ஆவார்
4. கண்டிய நடனம் ……………………….. என்னும் நாட்டிற்குரியது.
5. நாட்டுக் கூத்துக்களில் முக்கிய இயக்குனர் …………………………. ஆவார்
6. முன்னாயத்தம் இன்றிச் சித்திரிக்கப்படுவது …………………… ஆகும்
7. சிறப்பான ஒரு கட்டட நிர்மாண அம்சமாகிய கூட்டு கூரை அமைப்பு காணப்படும் கட்டடம் ……………………… ஆலயம் ஆகும்
8. போதிசத்துவரின் கொடைச் (தானச்) சிறப்பு நன்றாகச் சித்திரிக்கப்பட்டுள்ள முக்கியமான ஓர் இடம் ………………………………. ஆகும்.
9. இசைக்கு ஆதாரமாக உள்ள ஸ்வரங்கள் …………………………….. என்பனவாகும்.
10. நடிகரின் உளச் சமநிலையைப் பேணுவதற்கு ……………………………… சிறந்ததொரு பயிற்சியாக அமையும்.

(1x10 = 10 புள்ளிகள்)

**11-20 வரையுள்ள வினாக்களின் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

11. கலைகளின் மொத்த எண்ணிக்கை
    (1) 63 (2) 64 (3) 65 (4) 60
12. பாட்டைத் தொடங்குவதற்கு அடிப்படையாக இருக்கும் ஒலி விசேடம்
    (1) சுருதி (2)ஸ்வரம் (3) ஸ்தாயி (4)லயம்

13. நடுத்தர அளவுள்ள அலங்காரம் செய்யப்பட்ட அழகிய மட்குடம் தலையில் வைத்து பக்தி சிரத்தையோடு ஆடப்படும் நடனம்

(1) செம்பு நடனம் (2) காவடி (3) கரகம் (4) வேப்பிலை நடனம்

14. ஈழத்துத் தமிழ் நாடக பிரபல சிறுவர் நாடகத்தின் முன்னோடியாகக் கருதப்படுபவர்

(1) மௌனகுரு (2) சண்முகன் (3) வித்தியானந்தன் (4) குழந்தை ம. சண்முகலிங்கம்

15. சித்திரம் வரைதலின் போது தளவடிவங்களை மேலும் தெளிவாக வேறாக்கிக் காட்டுவதற்காக பயன்படுத்தப்படும் வர்ணங்கள்

(1) எதிர் வர்ணங்கள் (2) மூல வர்ணங்கள் (3) நீல வர்ணம் (4) வெண்ணிற வர்ணம்

16. கழி கொட்டி ஆடப்படும் நடனம்

(1) கும்மி (2) கதகளி (3) கோலாட்டம் (4) கழியாட்டம்

17. பின்வருவனவற்றுள் பிரதானமாகக் குரலை முனைப்புறுத்தும் கலைவடிவமாக அமைவது எது?

(1) தெருவெளி நடனம் (2) இசை நாடகம் (3) தொலைக்காட்சி நாடகம் (4) வானொலி நாடகம்

18. சித்திர ஆக்கங்களுக்காக நிறங்களைப் பயன்படுத்தும் போது முதன்மை வர்ணங்கள் முக்கியத்துவம் பெறும் பின்வரும் நிறங்களுள் முதன்மை நிறம் எது?

(1) நீலம் (2) கறுப்பு (3) கபிலம் (4) ஊதா

19. இசையைக் கற்பதன் மூலம் விருத்தியாகும் பண்புகளுள் ஒன்று

(1) இரக்கம் (2) நளினம் (3) பொறாமை (4) ஞாபக சக்தி

20. சப்த தாளங்களுள் ஒன்று

(1) ஆதி தாளம் (2) மட்டிய தாளம் (3) திருகு தாளம் (4) நாட்டிய தாளம்

(1x10 = 10 புள்ளிகள்)

**21 -30 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

21. தோற்கருவிகளுக்கு உதாரணம் இரண்டினைக் குறிப்பிடுக.

………………………………… ……………………………………..

22. நாதத்தின் இரண்டு வகைகளைக் குறிப்பிடுக.

………………………………….. ………………………………………….

23. நடிகன் வகிபாகச் சித்திரிப்பினை மேற்கொள்வதற்கு அவனுக்கு உதவும் துணைக்கூறுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

……………………………………… ………………………………………

24. பின்வரும் தாளங்களின் குறியீடுகளைக் குறிப்பிடுக

ஜம்பை தாளம் ………………………….

அட தாளம் ……………………………………

25. அனுராதபுர சந்திர வட்டக்கல்லுடன் ஒப்பிடுகையில் பொலனறுவைச் சந்திர வட்டக் கல்லில் காணப்படும் பிரதானமான இரண்டு வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(1)………………………………………………………………………………..

(2) ………………………………………………………………………………

26. நாடகம் பார்ப்பதினால் மாணவர்களிடத்தில் ஏற்படக்கூடிய மனவெழுச்சிப் பண்புகள் இரண்டு தருக.

(1)…………………………………………………………

(2)…………………………………………………………..

27. இரண்டு வகையான துணிச் சித்திரங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(1) …………………………………………………………….

(2) ……………………………………………………………………..

28. சங்கீதம் கற்பதினால் ஏற்படும் நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(1)…………………………………………………………………………………...

(2) ………………………………………………………………………………..

(3)…………………………………………………………………………………

(4)…………………………………………………………………………………

29. திரியாங்கங்கள் யாவை?

………………………………………………………………………………………

30. வெவ்வேறு பாணிகளைக் குறிப்பிடும் தொன்மையான நாடக நூலைக் குறிப்பிடுக.

…………………………………………………………………………………………

**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**
**கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறி – 2016/2018**
**உள்வாரி இறுதிப் பரீட்சை -2017**
**அழகியற் கல்வி – பொதுப் பாடப்பரப்பு**
**பகுதி - II**

**நேரம் : 2 மணித்தியாலயம்**

**அ, ஆ, இ, ஈ என்னும் நான்கு பகுதிகளில் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்த பட்சம் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**பகுதி (அ) – சங்கீதம்**

**1.** (i) சுருதி என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு, சுருதியின் வகைகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) ''உணர்வுகளுக்கும் இசைக்கும் நெருங்கிய தொடர்புண்டு'' இக்கூற்றை ஆராய்க. (04 புள்ளிகள்)

(iii) வகுப்பறையில் இசையினைப் பயன்படுத்தி கற்பிப்பதற்கு நீங்கள் எவ்வாறான செயற்பாடுகளைப் பயன்படுத்துவீர் ? உதாரணங்கள் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

2. (i) சப்த தாளங்களின் பெயர்களையும், அவற்றின் குறியீடுகளையும் தருக. (03 புள்ளிகள்)

(ii) ''கிராமிய இசையும் மனித வாழ்க்கையும்'' என்பதை ஆராய்க (04 புள்ளிகள்)

(iii) இசை கற்பித்தலில் சூழலின் பங்கு என்பது பற்றி விளக்குக. (05 புள்ளிகள்)

**பகுதி (ஆ) – நாடகமும் அரங்கியலும்**

**3.** (i) அரங்க விளையாட்டுக்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) மாணவரது ஆளுமை விருத்திக்கு அரங்க விளையாட்டுக்களின் முக்கியத்துவத்தினை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) ஆசிரிய வகிபாத்தின் வெற்றிக்கு 'நடிப்பு' துணையாகும் விதத்தை விளக்குக. (05 புள்ளிகள்)

4. (i) நாடகக் கலையினுள் அடங்கும் துணைக்கலைகளைத் தருக. (03 புள்ளிகள்)

(ii) நாடகக்கலை ஏனைய கலைகளிலிருந்து வேறுபடும் முறையினை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) நாடகம் பற்றிய கற்கையானது 'மனித சுபாவங்களைப் புரிந்து கொள்வதற்கும், பல்வேறு வகையான மனவெழுச்சிகளையும் அறிந்து கொள்வதற்கும் உதவும்' என்பர். விளக்குக. (05 புள்ளிகள்)

### பகுதி (இ) – நடனம்

5. (i) கிராமிய நடன வகைகள் ஆறு (6) தருக. (03 புள்ளிகள்)

   (ii) கிராமிய நடன ஆற்றுகையில் ஆசிரியர் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களைக் கூறுக. (04 புள்ளிகள்)

   (iii) நீர் பார்த்து இரசித்த கிராமிய நடனம் ஒன்றினைப் பற்றியும் அது உம்மைக் கவர்ந்தமைக்கான காரணம் பற்றியும் விளக்குக. (05 புள்ளிகள்)

6. (i) ‘மொழி தோன்றும் முன்பே நடனம் தோன்றியது’ இக்கூற்றிற்கான பொருத்தப்பாடுகள் மூன்றை எடுத்துரைக்க (03 புள்ளிகள்)

   (ii) நான்கு வகை அபிநயங்களைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றைப் பற்றி விளக்குக. (04 புள்ளிகள்)

   (iii) வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியர், மாணவர்கள் ஒவ்வொருவரையும் அறிந்திருக்க வேண்டியதன் அவசியத்தை பரதநாட்டிய பாடத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

### பகுதி (ஈ) – சித்திரம்

**7.** இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால சித்திரக்கலையில் இசுறுமுனி செதுக்கலும் ஒன்றாகும்.

   (1) அனுராதபுரத்தில் கருங்கல்லில் செதுக்கப்பட்ட புடைப்புச் சிற்பங்களுக்கு மூன்று உதாரணங்கள் தருக. ( 03 புள்ளிகள்)

   (2) மேலே குறிப்பிட்ட சிற்பங்களில் ஏதாவது ஒன்றைப் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

   (3) நீர் கற்பிக்கும் பாடத்தில் கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தும் போது உமது சித்திர பாட அறிவைப் பயன்படுத்தி எவ்வாறு தயாரிப்பீர் என்பதை மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

8. ‘‘கற்றல் - கற்பித்தற் செயன்முறையின் விளைதிறனை அதிகரித்துக் கொள்வதற்காக, ஆசிரியருக்கு கற்றல் - கற்பித்தல் சாதனங்கள் துணையாக அமையும். கற்றல் - கற்பித்தல் சாதனத்தைத் தயாரிப்பதில் சித்திர பாடத்தின் பங்களிப்பு அளப்பரியதாகும்’’

   (1) கற்றல் - கற்பித்தற் சாதனங்கள் தயாரிக்கையில் உதவத்தக்கனவும், ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் சித்திரப் பாடம் கற்றமையால் பெற்றவையுமான மூன்று திறன்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

   (2) அத்திறன்களைப் பயன்படுத்தி நீங்கள் தயாரிக்கத்தக்க கற்றல் - கற்பித்தற் சாதனங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

   (3) மேலே பகுதி (ii) இல் நீங்கள் குறிப்பிட்டுள்ள ஒரு கற்றல் - கற்பித்தற் சாதனத்தைத் தயாரிக்கையில், சித்திரத் திறன்களைப் பயன்படுத்தும் விதத்தை இரண்டு விடயங்களூடாக விளக்குக. (05 புள்ளிகள்)